# ‘????????????? ?????? ???????????? ???’ ??????: ?????? ?????????????????? ???????????????? ????? ???????????????!





பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் எதிர்ப்பினையும் மீறி போராட்டம் பொத்துவிலில் இருந்து ஆரம்பமானது.

தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அத்துமீறல்கள், பௌத்த மயமாக்கல் உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி வடக்கு கிழக்கு மாகாண சிவில் அமைப்புகளின் கோரிக்கைக்கு அமைவாக பொத்துவிலில் இருந்து பேரணி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போது இந்தப் பேரணியை முன்னெடுப்பதற்காக சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள், சர்வமதப் பிரதிநிதிகள், பொது அமைப்புகள் என பலர் கலந்துகொண்டனர்.

பொத்துவில் நகரில் போராட்டம் ஆரம்பமானபோது விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து போராட்டத்தினைத் தடுக்க முற்பட்டதுடன் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்த பதாதைகளை அகற்ற முனைந்தபோது முறுகல் நிலையேற்பட்டது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் மீது பொலிஸார் தாக்குதல் நடத்த முற்பட்டதை தொடர்ந்து முறுகல் நிலையேற்பட்டது. அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு தரப்பினரின் எதிர்ப்பினையும் மீறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

முன்னதாக பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸாரால், ஏற்றம் பகுதியில் தடைகளை ஏற்படுத்திப் போராட்டத்திற்குச் சென்றவர்கள் வழி மறிக்கப்பட்டு கடுமையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தன.

இன்று போராட்டத்தில் கலந்துகொள்வதற்குத் தடைகள் நீதிமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டிருந்த நிலையிலும் அதனையும் மீறி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போராட்டத்தில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களும் பொலிஸாரினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அக்கரைப்பற்று பகுதிக்குப் பேரணி சென்றதையடுத்து தொடர்ந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் குறித்த போராட்டம் அக்கரைப்பற்று நகர் ஊடாக அட்டாளைசேனை வரையில் நடைபெற்றது.

- 


#P2P
ஒரு நாடு
ஒரு சட்டம் என்றால்
அரசியல்
"பொத்துவில் தொடங்கி
பொலிகண்டி வரை"



- 
POLICE
- 
STOP
POLICE

- 
#P2P
P2P

- 

- 
POLICE

- 
- 
POLICE
POLICE


#P2P
உரிமைக்காய்
ஓரணியாய்

.

---

# ??????????????? ????????? ???? ????? ????????? ??????? ??????????!


1227
Where are the Disappeared Tamil
சுழற்சி முறையிலான
உணவு தவிர்ப்பு
போராட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் ஆரம்பிக்கப்பட்ட தொடர் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகத் தொடர்கின்றது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக குறித்த போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், இன்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

சுதந்திர தினத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கறுப்புத் துணிகளால் முகத்தை மறைத்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.






# ??????????????????? ???????? ???? ??????????? ???????? ??????????????????? ICPPG ??????



இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களை மேற்கொள்ளும் நாடுகளுடன் பிரித்தானியா வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதனை நிறுத்தும் வர்த்தக மசோதாவின் திருத்தங்களை ஆதரிக்கக் கோரி ICPPG வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை உட்பட இனப்படுகொலை செய்யும் நாடுகளுடன் பிரித்தானியா அரசாங்கம் வர்த்தக ஒப்பந்தங்களை செய்வதை தடுக்கும் வர்த்தக மசோதாவின் திருத்தங்களுக்கு அனைத்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரபுக்கள் சபை உறுப்பினர்களையும் (House of Lords) ஆதரவளிக்க வேண்டுகோள் விடுத்து சர்வதேச இனப்படுகொலையைத் தடுப்பது மற்றும் கண்டிப்பதற்கான சர்வதேச மையத்தினால் (ICPPG) இன்று ஊடக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் எதிர்கால வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பில் House of Commons இடம்பெற்ற நீண்ட விவாதங்களிற்கு பின்னர் அவை தற்போது House of Lords இற்கு நகர்ந்துள்ளதாகவும் தொழிற்கட்சி வேறு சில எதிர்க்கட்சிகளின் உதவியுடன், இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்களைச் செய்யும் நாடுகளுடனான வர்த்தக தொடர்புகளை உயர் நீதிமன்றம் தடை செய்வதனை பிரித்தானிய அரசாங்கம் அனுமதியளிக்க வலியுறுத்தி வருவதாகவும் Lords amendment 3, from Lord Alton, Lords amendment 2, from Lord Collins ஆகிய இரு திருத்தங்களே மேற்குறித்த நாடுகளுடன் பிரித்தானிய அரசின் வர்த்தக நடவடிக்கைகளை வரையறுக்க வழிகோலும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய இலங்கை நிலைப்பாடு தொடர்பில் ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட "நீதி வழங்கும் முயற்சிகள் கைவிடப்பட்டு உயரதிகாரிகள் கடந்த கால குற்றங்களை ஒப்புக்கொள்ள மறுத்து வருவதால் இலங்கை கடந்த காலத்தைப் பற்றி மறுக்கும் நிலையில் உள்ளதுடன் மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமை மற்றும் எதிர்கால உரிமை மீறல்களிற்கான அபாயத்தின் முன்னெச்சரிக்கை அறிகுறிகளை குறித்து நிற்பதால் இதனை தடுக்கும் வலுவான நடவடிக்கைகளிற்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது"என்பதனையும் அதில் சுட்டிக்காட்டியுள்ளது.



இது தொடர்பாக கருத்து தெரிவித்த திருமதி அம்பிகை செல்வகுமார் “ஈழத்தமிழர்கள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக அனைத்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பிரபுக்கள் சபை உறுப்பினர்களையும் (House of Lords) மேற்படி திருத்தங்களிற்கான ஆதரவினை வழங்க வைப்பதன் மூலம் இந்த திருத்தங்களை நடைமுறைக்கு கொண்டுவந்து, இலங்கை போன்ற இனப்படுகொலை புரியும் நாடுகளுடனான வியாபார ஒப்பந்தங்களை தடுக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

ICPPG அமைப்பின் ஊடக ஒருங்கிணைப்பாளரான திருமதி நிலானி கிரிஸ்டி காண்டீபன் கருத்து தெரிவிக்கும் போது, தாங்கள் வேண்டுகோள் விடுப்பதைப்போல, ஏனைய தமிழ் அமைப்புக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் பிரித்தானிய அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும குறிப்பிட்டார்.